# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை (06-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 10


# கன்ரபரி அதிமேற்றிராணியார் இனப்பிரச்சினை பற்றி பேசுவார்

## பிரேமா, சிறிமாவுடன் சந்திப்பு

கொழும்பு, டிசம்பர் 6

கொழும்பு வந்துள்ள கன்ரபரி அதிமேற்றிராணியார் அதி. வண. ஜோர்ஜ் லியோனார்ட் கேரி, இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அவர் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும், பௌத்த மகாநாயக்க தேரர்களுடன் பேசுவதற்கும் ஏற்பாடாகி உள்ளது.

இங்கிலாந்தின் மதபீடமான அங்கிலிக்கன் திருச்சபையின் முதல்வராக விளங்குபவர் கன்ரபரி அதிமேற்றிராணியார் (ஆர்ச் பிஷப்) அதி. வண. ஜோர்ஜ் கேரி. இவர் பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையின் அங்கத்தவராகவும் விளங்குபவர் ஆவார். பிரிட்டனின் சக்தி மிக்க மதத் தலைவராகவும் இவர் கருதப்படுகிறார்.

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயராக வண. ஹோரத் பெரினான்டோவைத் திருநிலைப்படுத்தும் வைபவத்தை நடத்துவதற்காக கன்ரபரி அதிமேற்றிராணியார் நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தார். திருநிலைப்படுத்தும் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

கன்ரபரி அதிமேற்றிராணியார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை நாளை திங்கட்கிழமை காலை பத்து மணிக்குச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசவுள்ளார்.

அப்போது இனப்பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும், போரை நிறுத்த வேண்டியதன் தேவையையும் அதிமேற்றிராணியார் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளைய தினமே கன்ரபரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பயணிகள் பலர் வவுனியாவில் கைது

கொழும்பில் இருந்து வந்த தமிழ் பயணிகள் பலர் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்ததாகக் குற்றஞ்சாட்டியே இவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் உள்ள சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகவும். தேவையற்ற குற்றச்சாட்டுகளின் பேரில் தமிழ்ப் பயணிகள் தடுத்து வைக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, நொச்சிமோட்டை பாலத்தருகே இராணுவத்தினர் புதிதாகக் காவலரண்களை அமைத்து வருகின்றனர். காவலரண்களை அமைக்கும் வேலைக்கு தமிழ்ப் பயணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## தமிழர் பிரச்சினை பற்றி ராவ் - பிரேமா பேசுவர்

கொழும்பு, டிச. 6

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெறும் சார்க் மாநாட்டின்போது இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச ஆகிய இருவரும் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை இனப்பிரச்சினை குறித்து அவர்கள் இருவரும் முக்கிய பேச்சுக்களை நடத்தலாம் என நம்பப்படுகிறது.

இலங்கையும் இந்தியாவும் இணைந்து பயங்கரவாதத்தை ஒழிக்கும் சாத்தியக்கூறுகள் தொடர்பாக இவர்கள் கருத்துப் பரிமாறுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ)

## இராமர் ஆலய விவகாரம்: அயோத்தியில் பதற்றம்

### 2 லட்சம் இந்துக்கள் கூடியுள்ளனர்

லண்டன், டிச. 6

இந்தியாவின் உத்தரப் பிரதேச - அயோத்தியில் பாப்ரி மசூதிப் பகுதியில் இராமர் ஆலயம் எழுப்பும் பணிகளை இன்று மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக பாரதிய ஜனதாக் கட்சி உட்பட்ட இந்து கட்சிகளின் தொண்டர்கள் அறிவித்துள்ளனர். இதனை அடுத்து அயோத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட "கொங்கிறீற்" மேடை ஒன்றை சுத்திகரிக்கும் வேலை மட்டுமே இன்று நண்பகல் வேளை மேற்கொள்ளப்படும் என்றும் நேற்று அயோத்தியில் கூடிய இந்து மதவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஆலயக் கட்டுமானப் பணி திட்டமிட்டபடி இன்று ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்த்து சுமார் 2 லட்சம் இந்துக்கள் அயோத்தியில் வந்து குவிந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய கட்டடங்களையே கட்டக்கூடாது என இந்திய உயர் நீதிமன்றம் தடைவிதித்திருப்பதால் இன்று மேற்கொள்ளப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள சுத்திகரிப்புப் பணி உயர்நீதிமன்ற உத்தரவை அவமதிப்பதாகக் கருதப்படமாட்டாது என அயோத்திப் பகுதிக்குச் சென்றுள்ள பத்திரிகையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அயோத்தியை நோக்கி சுமார் 200 ஜனதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'பரா' துருப்புக்கள் குவிப்பு பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

அயோத்தியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பல ஆயிரக்கணக்கான "பரா" இராணுவத் துருப்பினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அயோத்தியின் நுழைவாயில்களில் படையினர் விழிப்புடன் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில்—

அயோத்தியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் உத்தரப்பிரதேச மாநில முதல்வரை அவசர கடிதம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

விஷக்கிருமிகள், வெடிகுண்டுகள் என்பவற்றைப் பயன்படுத்தி சிலர் பாப்ரி மசூதியை தகர்க்க முயலலாம் என அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

அயோத்தி நிலவரம் குறித்து தாம் கவலை கொண்டிருப்பதாகவும் பாப்ரி மசூதி மீது யாரும் கை வைத்தால் அதைத் தடுக்க அங்கு போதிய பாதுகாப்புப் படைகள் இல்லை என்றும் உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்திருப்பதாக பி.பி.ஸி. அறிவித்தது.

(இ-5)

## படையினர் அவலநிலை பற்றி கூறிய உப சபாநாயகருக்கு எதிராகச் சதி!

கொழும்பு, டிச. 6

போர்முனையில் உள்ள படையினரின் அவலநிலை பற்றி நாடாளுமன்றத்தில் கூறியதற்காக தமக்கு எதிராக இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்கள் சதிமுயற்சியில் ஈடுபட்டதாக உப சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

சண்டே ஐலண்ட் வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றப் பேச்சுக் குறித்து தம்மிடம் இருந்து விளக்கம் கோரவேண்டும் என்பது பற்றி அந்த எம். பிக்கள் பேசிக்கொண்டு இருந்தனர் என்றும்—

நாடாளுமன்றக் குளியல் அறை ஒன்றினுள் நடந்த அப்பேச்சுக்களை சுதந்திரக் கட்சி எம். பியான எம். கே. டி. எஸ். குணவர்த்தனா கேட்க நேர்ந்தது என்றும் திரு. பொன்சேகா கூறினார்.

திரு. குணவர்த்தனா அந்த எம். பிக்களுக்கு புத்திமதி கூறியதுடன் — உண்மையைக் கூறி ஜனாதிபதிக்கு திரு. பொன்சேகா உதவுவதாகவும் தெரிவித்தாராம்.

அரசினால் பூரணமாக வெளியிடப்படாத

## ஆணைக்குழுவின் முழு அறிக்கை: திருமதி கொப்பேகடுவ கோருகிறார்

கொழும்பு, டிச. 6

இஸ்மாயில் ஆணைக்குழுவின் முழு அறிக்கையின் பிரதியை தனக்கு தந்துதவுமாறு திருமதி கொப்பேகடுவ அரசாங்கத்தை கோரி உள்ளார்.

கொப்பேகடுவவின் மரணம் குறித்து விசாரிக்க நியமிக்கப்படவுள்ள சர்வதேச நீதி விசாரணைக் குழுவில் எந்த அமைப்பின் அங்கத்தவர்கள்— அதாவது ஐக்கியநாடுகள்சபை, அணிசேரா இயக்கம், பொதுநலவாய நாடுகள் அமைப்பு, சார்க் அமைப்பு ஆகியவற்றில் எந்த அமைப்பை சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை தெரிவிக்குமாறு திருமதி கொப்பேகடுவவை ஜனாதிபதி கோரியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதத்திலேயே இஸ்மாயில் ஆணைக்குழுவின் முழு அறிக்கையின் பிரதியை தனக்கு முதலில் தருமாறு திருமதி கொப்பேகடுவ கோரி உள்ளார்.

திரு. கொப்பேகடுவவும் மற்றைய படை அதிகாரிகளும் [illegible] அளிக்கப்பட்ட விளக்கங்களை தாம் நிராகரிப்பதாகவும் —

அரசாங்கத்தால் தரப்பட்ட விளக்கங்கள் சோடிக்கப்பட்ட ஒன்றென்றும் — திருமதி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

திரு. கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக விசா

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயக் குருக்கள் தேவை

## ஸ்ரீ கடையிற்சுவாமிகள் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்தின் தற்போதைய குருக்கள் வெளியூர் செல்லவிருப்பதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கு குருக்கள் ஒருவர் தேவைப்படுகின்றார். 45 வயதிற்கு மேற்பட்ட தகுதிவாய்ந்தோர்கள் உடனடியாக சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

பரிபாலன சபையினர்,
29/1, கடையிற் சுவாமிகள் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

[23507]

# கேள்வி மீளக் கோரல்

## சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை 14 - 12 - 1992 ஆம் திகதி பி. ப. 4-00 மணிவரை இப்பணிமனையில் ரூபா 50 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 15-12-1992 ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றே திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினால் திறக்கும் சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மலசலகூடம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ சேர்க்கலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,
01 - 12 - 1992.

சுகாதார சேவைகள் -
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
இல. 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

[இ-3957]

# கண்ணீர் அஞ்சலி

## சீனிவாசகம்

வைத்தீஸ்வராக் கல்லூரியைக் கட்டியெழுப்பிய மும்மணிகளில் ஒரு மணியாகத் திகழ்ந்து இன்று வரை ஒளிவீசிய ஆசிரிய தீபமே! சீனிவாசகம் எனும் செம்மனச் செல்வமே!

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[23526]

# 31ஆம் நாள் ஆத்ம சாந்தி நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 — 06 — 1927 | 06 — 11 — 1992 |

தாவடி தெற்கைச் சேர்ந்த

## திருமதி ஐயாத்துரை பூரணம்

அன்புடனும், பாசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து, சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்.

அம்மாவின் பிரிவால் துயருற்ற எங்களுக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர், உறவினர், நண்பர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

[5681]

மலத்தியோன் வந்ததை அடுத்து

# மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். மாவட்டத்தில் மலேரியா காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நுளம்பை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் மலத்தியோன் மருந்து ஆயிரத்து 800 லீற்றர் யாழ்ப்பாணம் வந்துள்ளதை அடுத்து தடுப்பு நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன.

மலேரியா அதிகளவில் பரவியுள்ள பகுதிகளிலும் பெருகும் வாய்ப்புள்ள பகுதிகளிலும் மலத்தியோன் தெளிக்கப்பட்டு வருகின்றது.

தெற்பலி பண்டிதர் குடியிருப்புத் திட்டப் பகுதியிலும் மலத்தியோன் தெளிக்கும் வேலை நடைபெற்று வருகின்றது.

வடமராட்சி கிழக்கு பகுதிகளிலும் தடுப்பு நடவடிக்கை இடம் பெறவுள்ளது.

மலத்தியோன் தெளிக்கும் குழுவினருக்கு, மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு மலேரியா தடுப்பு இயக்கத்தினர் கேட்டுள்ளனர்.

(ஓ-162)

## இன்று

யாழ்ப்பாணம், டிச. 6

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர் காரைநகர் மாணவர்களுக்கான ஆங்கில பேச்சுப் போட்டி ஒன்றை இன்று நடத்துகின்றனர்.

இருவர்கள் கலந்து கொள்ளும் இந்தப் போட்டி இன்று காலை 8 மணிக்கு யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 6

மெய்கண்டதேவர் ஆதீனச் சைவசித்தாந்த கலா நிறுவனத்தின் ஏற்பாட்டில், சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்த பிள்ளை நிகழ்த்தும் சிவஞானசித்தியார் விரிவுரை இன்று காலை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

★ ★ ★

இரசிகமணி கனக செந்திநாதனின் பதினைந்தாவது நினைவுதின நிகழ்ச்சி இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கோட்டத்தில் நடைபெறும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கவிஞர் இ. முருகையன் "மரபின் முன்னிலையில் இரசிகமணி" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். [த-க]

★ ★ ★

ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சை தொடர்பாக மேற்பார்வையாளர்கள் நிரந்தர நோக்குநர்கள், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இன்று காலை 9-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். [த-118]

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். நாவலர் கல்விக் கழக கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (இ)

★ ★ ★

கொழும்புத்துறை, டிச. 6

"இடம்பெயர்ந்த மக்களுக்கான போசாக்கும் சுற்றுப்புறச் சுகாதாரமும்" என்ற தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

[இ-30]

## தபாற் கந்தோரில் திருட்டு

சரவெட்டி தபாற் கந்தோரில் கடந்த வியாழன் இரவு ஓடுகள் பிரிக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெறுமதிமிக்க வால்கடிகாரங்கள் கைவற்றை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

# புலமைப் பரிசிலில் சாதனை

1992 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது மாணவர்கள் தொடர்ந்தும் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்
199 புள்ளியைப் பெற்று அகில இலங்கையில் முதல்ரம் இடத்தைப் பெற்ற மாணவன்

## செல்வன் கா. பிருந்தாபன்

எமது நிலைய மாணவன். எமது நிலையத்தில் கல்வி பயின்று மாதிரிப் பரீட்சையில் தோற்றி சித்தி பெய்திய மாணவர்களை வாழ்த்துகிறோம்.

★ அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்

புலமைப் பரிசில் வகுப்புகள்: 05-12-1992 சனி ஆரம்பமாகியுள்ளன.

## புதிய கல்வி நிலையம்,

219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[23528]

# சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசு பரீட்சையில் கூடிய புள்ளி பெற்ற

## செல்வன் கருணாகரன் தர்சன்

அவர்களை வாழ்த்துகின்றோம்.

1993 - ஆண்டு I அனுமதி விண்ணப்பம் 02-01-93 வரை ஏற்றுக் கொள்ளப்படும்

வி. ஏரம்பமூர்த்தி
(அதிபர்)
ஆசிரியர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

[5444]

யாழ். மாவட்ட
இறைச்சிக்கடை உரிமையாளர் சமாச

# முக்கிய அறிவித்தல்

இவ்வருட மார்கழி மாத இறுதிப் பொதுச் சபைக் கூட்டம் உப தலைவர் திரு. க. தங்கராசா தலைமையில் நாளை (7 - 12 - 92) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 9, சின்னக்கடை டச்சு வீதிக் காரியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பல தரப்பட்ட விடயங்கள் பேசப்பட இருப்பதால் சகல இறைச்சிக்கடை உரிமையாளர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

க. சி. கிருஷ்ணன்
செயலாளர்

அற்புதராசா (பபி)
உப செயலாளர்

[இ/3960]

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.

1993 ஆம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டிற்கு சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றைக் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக, 20 - 11 - 92 ஆம் திகதிய "உதயன்" பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைவாக கீழ்க்குறிப்பிட்ட விபரப் பிரகாரம் கேள்விப் பத்திரங்களை வழங்கல், கேள்விகள் ஏற்றல், கேள்விகள் திறத்தல் ஆகியவற்றின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கல்:-
1992-12-14 ஆம் திகதி 12-00 மணி வரை.

கேள்விகள் ஏற்றல்; திறத்தல்:-
1992-12-17 ஆம் திகதி மு. ப. 10-00 மணிக்கு.

கந்தையா கனகரத்தினம்
விசேட ஆணையாளர்

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
1992 - 12 - 04

[இ/3961]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டப் பயிற்சியாளர்

# அமரர் பத்மநாதன் (ரீ.பி.) நினைவுமலர்

06—12—1992

## உன்னை நினையாமல் உதைபந்தை நினைத்தவனே!



கட்டுடையிலே பிறந்தாய், ஸ்கந்தாவிலே கற்றாய்!
கருவினிலே திருவானாய் காதலித்தாய் விளையாட்டை!

'லக்ஷோ'வில் பயின்றாய், 'லக்கிலி' உன்மேல்,
★ ரீ. ரீயின் பார்வை விழுந்தது ரீ. பீ!

அறுபதுகளிலே நாம் அற்புதம் படைத்தோம்;
வெற்றிகள் எம்மைத் தொடர்ந்தன வெகுவாய்,
எட்டு ஆண்டுகள் இணையிலாச் சாதனை
எட்டிப் புதியோர் இலக்கினைத் தொட்டோம்;

உன்னை நினையாமல் உதைபந்தையே நினைத்தவனே!
பென்னம் பெரிய 'சீல்ட் ஐய' இவர் சீல்ட்
பெற்றோம்; வெற்றி கண்டாடினோம்; பாடினோம்!

அலை மின்னல் போல் எங்கோ அலைந்த உன்னை
நினைவாக வைத்திருந்தோம் - மகாஜனாவின்
வெலற்கரிய அணிகள் பல வைத்தோம் நாங்கள்
புகழ் உன்னால் மின் தொடவே பூரித்துப் போனோம்

அணித்தலைமை வகிப்பவர்கள் உருவானார் ஆங்கே,
ஆருவர் ஐய, உன்போல் அரும்பணி ஆற்ற?

துன்பம் எத்தனை வந்த போதிலும் சோர்ந்திடாத
பண்பு, துணிச்சல், நுண்மதி, உண்மை
பற்று ஒன்றையே நோக்கிடும் நோன்பு
தெரிவு பெற்றுயர்ந்த நல் ஞானம்
விரிந்திடும் சிந்தனை ஓய்விலாத் தேடல்
இளகிய உள்ளம் — இவை உன் இயல்பு
இன்னுமாயிரமாய் இவை பல நீளும்!

காற்றிடை மரமெனச் சுழலும் நம் வாழ்வில்
கடிதில் வந்தொரு சோகம் படிந்தது
காற்று ஓய்ந்த தாய்க் கன்றுகள் கதறும்
கண்கள் கலங்கிட மேனி சிலிர்க்கும்
நெஞ்சம் பதறும் திரியும் சிதறும்

போதனையால் அல்ல; புதுமை படைப்பது நம்
சாதனையால் என்று காட்டினாய்! அதனைப்
பொங்கும் நெஞ்சுடன் புரிய முயல்கிறோம்.

எதிரணி வீரனின் இடைத் தொய்வு பார்த்து
எங்கே அடிப்பதென்று இயம்பும் நின் பாணி

கிரிக்கெட்டா, ஹொக்கியா, ஃபுற்போலா எதிலும்
பந்தை எடுத்தருமை ஒலியம் செய்வாயே!

இரு நூறாண்டு முடிந்த பின்னும் இறவாதிருப்பாய் நீ!
எடுத்த பந்தில்; வெற்றி பெறு வீரர் மூச்சில் வாழ்வாய்
ஐய, எம் முற்றத்துப் பூக்காடே, பேராசை ஒன்றெமக்கு
எம் இளைய தலைமுறையின் ஆற்றல்களில்-
இறங்கி வா - நீ!

★ "ரீ. ரீ." — அதிபர் ரீ. ரீ. ஜெயரத்தினம்;

மலர் அமைப்பு:
## பழைய மாணவர் சங்கம்
மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை.

(விளம்பர இல. இ-3955)

## விஞ்ஞானபூர்வ யுக்திகளை விளையாட்டில் புகுத்திய வீரர்!

வெறுமையாகக் காலால் பந்தை உதைப்பது தான் உதைபந்தாட்டம் என்று பாடசாலை மட்டங்களில் கருதிக் கொண்டிருந்த வேளையிலே, விளையாட்டிலே விஞ்ஞானபூர்வமான யுக்திகளைப் புகுத்தி, அந்த நுட்பத்தை உதைபந்தாட்டத்திலே நிலைபெறச் செய்த சிற்பிகளுள் ஒருவர் ரீ. பி.

வடக்கில் உதைபந்தாட்டம் என்றால் ரீ. பி. இல்லாமல் இல்லை என்று பேசப்படும் அளவுக்கு சிறந்த பயிற்சியாளராக உயர்ந்து நின்றவர்.

தன்னை வெளியே பகிரங்கப்படுத்தாமல் தான் பயிற்றுவித்த அணிகளின் சாதனைகள் மூலம் தன் பெயரை விளையாட்டு உலகில் பிரபல்யப்படுத்தி தனி முத்திரை பதித்தவர்.

### உதைபந்தாட்ட ஜாம்பவான்

இவ்வளவு அமைதியான— அடக்கமான — கனிவான — பழகுவதற்கு இனிமையான சுபாவமுடைய — மனிதருக்குள் உதைபந்தாட்ட ஜாம்பவான் ஒருவன் எப்படி ஒளிந்திருக்கிறான் என்று அவரைப் பார்க்கும்போதெல்லாம் நான் நினைப்பதுண்டு.

"நதி மூலம்; ரிஷி மூலம்" பார்ப்பது போல அவரது ஆரம்பகால விளையாட்டு அனுபவங்களை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

சீரணிக்கு அருகே கட்டுடையில் பொன்னுத்துரை என்ற பெயிலருக்கும் அவர் மனைவி பகவதிக்கும் 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி பத்மநாதன் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை கட்டுடை அ. மி. த. க. பாடசாலையில் பயின்ற பத்மநாதன் பின் உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தொடர்ந்தார்.

பாடசாலை நாட்களிலேயே உதைபந்தாட்ட "வைத்தியம்", அவரைப் பிடித்துக் கொண்டது.

### பந்தை அடிக்கும் லாவகம்

உதைபந்தாட்ட மைதானத்தில் வலது முன்னணியில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தவர்.



அமரர் ரீ பி. பத்மநாதன்
தோற்றம்: 10-02-1934
மறைவு: 06-11-1992

ரீ. பியின் "அதிரடிகள்" எதிரணி கோல்காப்பு வீரர்களை கலங்கடிப்பதை ரசிகர்கள் பலரும் மறந்திருக்கமாட்டார்கள்.

வயது முதிர்ந்த வேளையிலும் பந்தை லாவகமாக விளையாடி, கோலுக்குள் தள்ளும் அவரது பாணியை அண்மையில் கூட இளவட்டங்கள் மூக்கின் மேல் விரலை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததை நான் அவதானித்திருக்கிறேன்.

விளையாட்டுத் துறையினால் அவர் காட்டிய அக்கறையால் அவரைப் பெற்றோர்கள் அத்துறைக்கே வழிகாட்டி விட்டனர்; இந்தியாவில் வைஎம்சிஏ விளையாட்டுத்துறையில் உயர் பயிற்சி பெற்றார்.

விளையாட்டுத் துறையில் ரீ. பியின் ஆற்றலை அவதானித்த மகாஜனாக் கல்லூரி அதிபர் ரீ. ரீ. ஜெயரத்தினம் அவரை கல்லூரி விளையாட்டுத் துறையுடனும் நூலகத்துடனும் இணைத்துக் கொண்டார்.

அன்று முதல் தமது இறுதிக்காலம் வரை மகாஜனா அணிகளை உயர் நிலைக்குக் கொண்டு வர அவர் ஆற்றிய அரும்பணிகளை வெறும் எழுத்தில் வர்ணித்துவிடமுடியாது.

### வழிநடத்தும் திறன்

உதைபந்தாட்ட அணிகளைப் பொறுத்தவரை தமது வீரர்களின் ஒவ்வொரு நிலைகளையும் தொய்யவிடாது வலிமையாக வைத்திருக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்பார் ரீ. பி.

பயிற்சிக் காலத்திலே வீரர்களை உற்சாகப்படுத்தி, தன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிகள் குவித்த நாயகன்

★ 1962இல் மகாஜனாவில் நூலகர், விளையாட்டுத் துறைப் பயிற்சியாளராக நுழைவு.

★ 1961 முதல் 1970 வரையான காலப்பகுதியில் மகாஜனாக் கல்லூரி பங்குபற்றிய 16 உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் 13 மாவட்ட விருதுகளைப் பெற வைத்தமை.

★ 1967 முதல் 1974 வரை தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகள் யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மகாஜனா முதலாம் பிரிவு அணி சாம்பியன் பட்டத்தை நிலை பெறச் செய்து சாதனைபுரிய வைத்தமை.

★ 1967இல் கல்லூரியின் மூன்று உதைபந்தாட்ட அணிகளையும் சாம்பியனாகத் தெரிவு செய்ய வைத்து சாதனை புரிந்தமை.

★ 1970இல் அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்டத்துக்கான CSFA விருதை (ஜோன் ரபற் கேடயத்தை) மகாஜனா அணிக்கு பெற்றுக் கொடுத்தமை.

### தலைசிறந்த அணியை உருவாக்கினார்

★ 1978இல் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே "சிங்கர்" வெற்றிக் கேடயத்துக்காக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மகாஜனா [illegible] நாட்டின் தலைசிறந்த பாடசாலை உதைபந்தாட்ட அணியை உருவாக்கி, வழி நடத்தியமை.

★ 1978இல் பாடசாலைகளுக்கிடையில் ஈழநாடு வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மகாஜனா அணி வெற்றி பெற வழிநடத்திச் சென்றமை.

★ ரீ. பியின் பயிற்சியில் உருவான என் வடிவேல் வரன், கே. மோகன்ராம், எல். ராஜரத்தினம், மனோரஞ்சன் போன்றோர் அகில இலங்கைத் தெரிவு அணிகளில் இடம்பெற்று ரீ. பியின் திறமையை நிரூபித்தனர்.

### ஹொக்கியை அறிமுகப்படுத்தினார்

★ 1964 இல் மகாஜனாவில் ஹொக்கி ஆட்டத்தை அறிமுகப்படுத்தி ஹொக்கி அணிகளை நெறிப்படுத்தியமை.

★ 1966, 1967 ஆம் ஆண்டுகளில் மகாஜனா அணிகள் யாழ். ஹொக்கிச் சம்பியன் பட்டங்களைச் சுவீகரிக்க உரிய பயிற்சிகளை வழங்கியமை.

★ எம். வாமதேவராஜா, ஆர். மகேந்திரா, நோஹாவின் ராஜலிங்கம் போன்ற மகாஜனா ஹொக்கி வீரர்களை அகில இலங்கை பாடசாலைகள் தெரிவுக் குழுக்களில் இடம்பெற வைத்தமை.

★ 1963 இல் அவர் பயிற்றுவித்த கல்லூரியின் 17 வயது கிரிக்கெட் குழு தோல்வியடையா நிலையில் விளங்கியது.

★ யாழ் மாவட்டப் பாடசாலைகள் சங்க சுற்றுப் போட்டிகள் இடைநிறுத்தப்பட்ட பின்னர் கல்வித்திணைக்களம் நடத்திய நான்கு சுற்றுப் போட்டிகளில் மூன்றில் மகாஜனா அணிகள் வெற்றியீட்ட வைத்தமை.

### 58 ஆவது வயதிலும் விளையாடினார்

★ 1983 இல் யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியைப் பயிற்றுவித்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டித் தொடரில் வெற்றியீட்ட வைத்தமை

★ மீண்டும் 1992 இல் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை தங்கப் பதக்கம் சுட்ட நெறிப்படுத்தியமை.

★ 1992 இல் யாழ் கல்வித் திணைக்களம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் போது தான் பயிற்றுவித்த இளவாலை சென். ஹென்றீஸ் அணியை சாம்பியனாக வைத்தமை.

★ தெல்லிப்பழை இறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை பல்வேறு விளையாட்டுக்களிலும் மாவட்டத்தில் சிறந்த கழகமாகத் திகழ வைத்தவர். தாமே நேரில் விளையாடி கழகத்தை ஊக்கத்துடன் நெறிப்படுத்தியவர்; இவ்வருடம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் போது கூட கழக அணிக்காக தமது 58 ஆவது வயதிலும் விளையாடி, இறுதியாட்டம் வரை அணியை உயர்த்தியவர்.

★ இன்னும் பல, இன்னும் பல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ½ பரப்பு காணியுடன் கிணறு. மலசலகூட வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். கனகரட்ணம், 465/1, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். [23503]

உத்தமான வெள்ளடியன் சேவல், பேடுகள் பல நிறங்களில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [5628]

### மணமகள் தேவை

பிரான்ஸில் நிரந்தர வீசாவுடன் தொழில் புரியும் யாழ். இந்து, உத்தரட்டாதி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற 33 வயது மணமகனுக்கு 28 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்யலாம். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 467, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23452)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து உதயத்துச் செவ்வாய். Londonஇல் வீசாவுடன் Computer படிப்பவருக்கு அழகான, உயரம் குறைந்த செவ்வாய்க்குற்ற முள்ள, படித்த, ஆங்கில அறிவுள்ள, Londonக்கு வீசாவுடன் போக விருப்பமுள்ள மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில். முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும் இல 468, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [23515]

### நல்லினத் தோடை

விசாத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் நடைகாத்திரமான சிறந்த இனத் தோடைக்கன்றுகள் விற்பனைக்குண்டு. இடம்: துரை ஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். (5440)

### இலவச திருமண சேவை

50 வயதான, மணமுடிக்காத இந்துசமய ஆணுக்குத் திருமணம் செய்வதற்கு பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. அனுஷம், 3ஆம் பாதம். கடிதம் மூலமும் அல்லது புதன்தோறும் காலையில் தெரிவும். ஓய்வூதியர் சங்கம் 74, கலைவீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு தொடர்பு கொள்க. [5620]

### சங்கிலி தவறிவிட்டது

தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவரின் ஒரு சோடி காப்பும், சங்கிலியும் அடங்கிய கிறுவை 04-12-92 அன்று தலையாளி வைரவ கோவில் ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மனமிரங்கி சி. இராமச்சந்திரன் 87/27, தலையாளி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [23520]

### கைமாறிவிட்டது

04-12-92 அன்று 4-30 மணியளவில் இவாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் முக்கிய கடிதங்கள், மருந்துகள், சேலைகள் அடங்கிய உரப்பை தவறுதலாக மாறி எடுக்கப்பட்டுள்ளது. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து E. லவ்லியஸிங்கம், 523, நாவலர் றோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொண்டு, பைகளை மாற்றிக் கொள்ளவும். [23517]

### சனி நீராடு

சிரமமான எண்ணெய் நீராடல் சுகவாழ்வுக்கு அவசியம். எண்ணெய் நீராடத் திற்கு முந்தையோர் வழியில் அரப்பு, எலுமிச்சம் சோது, பயறு, வெந்தயம் மற்றும் மருத்துவ சரக்குகள் கொண்டு தயாரிக்கப்பட்டது ஒலிவ் நீராடல் பவுடர். அனைத்து கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது மிகக்கவனம். (கி-3944)

### கோழிக்குஞ்சுகள்

ஊர்க்கோழிக் குஞ்சுகள், முட்டையிடும் ஊர்க்கோழிகளும் விற்பனைக்கு உண்டு. G. சந்திரன், தலாற்கட்டை சந்தி, (சிறிகடைக்கு அருகில்) அரியாலை. [23493]

### ENGLISH

ஆங்கிலம் பேசப் பழக்கப்படுகிறது. கிழமையில் இரண்டு நாட்கள் English Grammar, English Literature, Spoken English, V N Kandasamy, A. I. B Part - I (London), Inter (London) இல: 87, திருநெல்வேலி றோட், (சாவத்திற்கு அண்மையில்) கொக்குவில். [23506]

## ஜனாதிபதி டாக்கா பயணம்

எதிர்வரும் 12ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகவிருக்கும் 'சார்க்' தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி பிரேமதாசா இம்மாதம் 11ஆம் திகதி மாலை டாக்கா புறப்படுவார் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## NEW MATHS ACADEMY

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**93 O/L MATHS**

சங்கர்

சனி & ஞாயிறு 6-7 மு. ப.
சனி & ஞாயிறு 2-6 பி. ப.

★ கணிதம் - Dக்கு உத்தரவாதம்.

ஆண்டு 10, 9, 8, 7, 6, 5

ஆரம்பம்: 06 - 12-1992 ஞாயிறு (கி-2802)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 19 — 07 — 1927



உதிர்வு: 06 — 11 — 1992


## திருமதி கந்தையா பாக்கியம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகவும், எம்மை வைபத்துள் வாழ்வாங்கு வாழவும் வழிவகுத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெரிய பளை,
பளை. (23521)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



இம்மைக்குள்: 02 — 09 — 1933

மறுமைக்குள்: 06 — 12 — 1990

## அமரர் ஜோர்ஜ் அருட்பிரகாசம்

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்."
யோ: 11:25

அன்பு மனைவி-
ஞானசோதி அருட்பிரகாசம்.

'ஞானவாசா', நெல்லண்டை,
பருத்தித்துறை. (23516)

## தேவை

ஓய்வுபெற்ற M. L. T. தேவை
சம்பளம் நேரில்பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகொள்ளவும்:

**சம்பந்தன் வைத்திய நிலையம்,**
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கிக்கு அருகாமையில்) [23509]

20 வருடங்களாக தரமான கல்வியுடன் நற்பழக்கவழக்கங்களையும் ஊட்டி சிறந்த கல்விமான்கள் பலரை உருவாக்கித் தரும் உன்னத நிறுவனம்.

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

## ஆண்டு 4, 5

புலமைப்பரிசில் பரீட்சைக்கான சிறப்பு வகுப்பின் புதிய பிரிவுகள்

**டிசம்பர் 6-ல் ஆரம்பம்**

★ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

★ முன்கூட்டியே பதிந்து உங்கள் இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். [5626]

## நன்றி நவில்கின்றோம்

### திரு. ஞானப்பிரகாசம் திருஞானம்

அராலி வடக்கைச் சேர்ந்த திரு. ஞானப்பிரகாசம் திருஞானம் (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா பொறியியலாளரும், முன்னைநாள் போக்குவரத்துச் சபை உப பிராந்திய அதிபரும், (A. R. M. B) வட்டுக்கோட்டை தொழில் நுட்ப கல்லூரி முன்னைநாள் ஆசிரியரும், மோட்டார் வாகன விலை மதிப்பீட்டாளரும், (டபிளசன்ஸ் கொம்பனி)) 02-12-92 அன்று இரவு சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக்கணவரும், திரு. யோகேஸ்வரன், திரு. மனோகரன் ஆகியோரின் தகப்பனாரும், திருமதி சுமித்திராதேவி யோகேஸ்வரன் (Forut - சுழிபுரம்) திருமதி வசந்தராணி மனோகரன் (கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்) ஆகியோரின் மாமனாரும், சுஜாரனின் அன்புப் பேரனாருமாவார்.

03-12-92 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் இடம்பெற்ற அவரது ஈமக்கிரியைகளில் தகவல் அறிந்து வருகை தந்து, பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
தி. மனோகரன்
(மகன்)

(23519)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் ரீ. பி. பத்மநாதன்

கட்டுடையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் கிறாஸ்கொப்பர் விளையாட்டுக்கழக ஸ்தாபகருள் ஒருவரும் (1954), தலைசிறந்த விளையாட்டு வீரருமாக இருந்து, 06-11-1992 இல் சிவபதமடைந்த, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- கிறாஸ்கொப்பர் ஸ்தாபக நண்பர்கள்.

சண்டிலிப்பாய்,
கட்டுடை. (5627)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கல்வியைக் காப்போம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நாளை தமிழ்ப்பகுதிகளிலும் ஆரம்பமாகிறது. ஒரு மாணவனின் கல்வித் தகுதியின் அடிப்படை அளவுகோலாக இப்போது விளங்குவது க. பொ. த. பரீட்சையே. அவனது உயர்கல்வியையும், எதிர்கால வாழ்வையும் நிர்ணயிக்கும் ஒரு தளமாகவும் கருதப்படுகிறது.

ஒரு மாணவனின் கல்வித் தராதரத்தை அல்லது அறிவு நிலையை பரீட்சையினால் நிர்ணயித்துவிட முடியுமா என்பது சர்ச்சைக்குரியது.

எனினும் பரீட்சைகளை கல்வித் திறமையின் அளவுகோல்களாகக் கருதும் வழக்கம் இன்னும் எம்மைவிட்டுப் போகவில்லை. புதிய கல்வி முறை ஒன்று அறிமுகமாகும் வரை பொதுப் பரீட்சைகள் முக்கியத்துவம் பெறவே செய்யும்.

அந்த வகையில் நாளை ஆரம்பமாகும் பரீட்சையில் தமது பிள்ளைகள் திறமையுடன் சித்திபெற வேண்டும் என்று பெற்றோரும், சிறப்புச் சித்திகள் பெறவேண்டும் என்று ஆசிரியர்களும் விரும்புவது இயல்பு.

அதனை பிரதிபலிக்கும் விதத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடந்தேறிய பரீட்சார்த்திகளுக்கு பெற்றோர் ஆசிரியர், மதகுருமார் ஆசி வழங்கிய நிகழ்வு மிகவும் பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதுமாகும். இது போன்ற நிகழ்வுகள் மாணவர்களுக்கு மேலும் கல்வி நாட்டத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும்.

தமிழர்கள் கல்வியையே தமது பிரதான சொத்தாக மதிப்பவர்கள்.

இதற்குப் பொருளாதார, சமூகக் காரணிகளும் உண்டு; அவற்றை இங்கு கூறப்புகின் விரியும்.

போர்ச் சூழ்நிலையிலும், பல நெருக்கடிகளின் மத்தியிலும், பல வசதியீனங்களின் மத்தியிலும், கல்வி உபகரணங்கள் உரிய நூல்கள் கிடைக்காத நிலையிலும் தமிழர்களுக்குக் கல்வி மீது உள்ள நாட்டமும், அக்கறையும் குறையவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது.

போர்ச் சூழ்நிலையிலும் ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணத்து மாணவர்கள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றமை பாராட்டப்பட வேண்டியதாகும்; கொழும்பு அதிகாரிகளும் இதனைப் பாராட்டி இருக்கிறார்கள்.

எனினும் தமிழர்களின் கல்வி வளர்ச்சியை ஒட்ட நறுக்கிவிட வேண்டும் என்பதே தென்னிலங்கையினரின் பொதுவான நோக்கமாக இருக்கிறது. ஆகையால் மேலெழுந்தவாரியான ஒருசில சாதனைகளைப் பார்த்து, நம் பெருமைபேசிக் கொண்டிருக்கக் கூடாது. குடாநாட்டில் இன்னும் பல பாடசாலைகளில் போதிய வசதிகள், வளங்கள் இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை, இட நெருக்கடி, ஆய்வுகூட மற்றும் விளையாட்டு மைதான வசதிகள் இல்லாமை என்பன கிராமப் பாடசாலைகளின் பெரும் பிரச்சினைகளாக தொடர்கின்றன.

எனவே மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதிலும், அவற்றுக்குத் தேவையான வளங்களை கண்டுபிடிப்பதிலும், மாணவர்களுக்கு ஆர்வத்துடன் கல்வியறிவை ஊட்டுவதிலும் பெற்றோர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் சமூக நலன் விரும்பிகள் ஆகியோர் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். அப்போது தான் தமிழர் கல்வி வளர்ச்சியை முறியடிக்கத் தென்னிலங்கையர் திட்டமிட்டு நடத்தும் போரை எதிர்கொள்ள இயலும்.

# சமஷ்டியை எதிர்ப்பதாக சிறிமா கூறவில்லையாம்!

## தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்கா விளக்கம்

கொழும்பு, டிச. 6

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டுவரும் யோசனையை தாம் ஆதரிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறவில்லையாம்.

இவ்வாறு விளக்கமளித்திருக்கிறார் நாடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவரும் ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பியுமான திரு. மங்கள முனசிங்கா.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒருயோசனையாக வடக்கு-கிழக்கை இணைக்காமல் தனித்தனி சமஷ்டி அமைப்பின் கீழான ஆட்சி முறை ஒன்றைக் கொண்டுவரும் திட்டத்தை தமிழ் எம். பியான ஸ்ரீநிவாசன் தெரிவுக்குழுவின் முன் வைத்திருந்தது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து—

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருப்பதை ரத்துச் செய்ய தமிழக் குழுக்கள் இணங்குமானால் சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டுவருவதை சுதந்திரக் கட்சி ஆதரிக்கும் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்ததாகவும்—

அரச தரப்பில் அமைச்சர் சாகுல் ஹமீத் இதனை ஆமோதித்தார் என்றும்— செய்திகள் வெளியாகின.

ஆனால் இச்செய்திகள் வெளியாகி ஒரு சில மணி நேரத்தில் அதனை சிறிமா மறுத்ததாக அறிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட தெரிவுக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டபின் — சில மணி நேரம் கழித்து — திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியத் தூதரகத்துக்குச் சென்றார் என்றும்—

அங்கு செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தாம் சமஷ்டி அரசமைப்பு முறையை ஆதரிக்கவில்லை என அவர் மறுப்பு வெளியிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மறுப்புத் தொடர்பாகவே திரு. மங்கள முனசிங்கா இப்போது விளக்கமளித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டுவருவதற்கு சுதந்திரக் கட்சியும் இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் திரு. மங்கள முனசிங்கா தெரிவித்தார்.

சமஷ்டி அரசமைப்பு முறையைக்கொண்டுவரும் ஸ்ரீநிவாசனின் யோசனையை சுதந்திரக் கட்சி ஆதரிக்கவில்லை என்று இந்தியத் தூதரகத்தில் வைத்து இந்தியச் செய்தியாளர்களிடம் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தது பற்றி திரு முனசிங்கா கருத்து வெளியிடுகையில்—

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கருத்தை இந்தியச் செய்தியாளர்கள் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கக் கூடும் என்றார்.

சுதந்திரக் கட்சி, ஸ்ரீநிவாசனின் யோசனைகளை அங்கீகரித்துள்ளது என்றும் அவர் கூறினார். (உ-எ)

### சுவாமி அறிவிப்பு:

## செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக அ. தி. மு. கவில் 72 எம். எல். ஏக்கள்

### கட்சியை உடைக்கத் தயாராம்

சென்னை, டிச. 6

அ. தி. மு. கவின் 72 எம். எல். ஏக்களும், ஆறு எம். பிக்களும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிராகச் செயற்படத் தயாராக உள்ளனர்.

ஜனதா தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெயலலிதாவைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அ. தி. மு. கவில் உள்ள வேறு ஒருவரை முதலமைச்சராக்க வேண்டும் என்பது தான் தமது நல்லாட்சி இயக்கத்தின் இலட்சியம் என்றும்—

ஆனால் அதற்கு முன்னர் ஜெயலலிதா தமது ஆட்சியைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தத் திட்டமிடுவதாகவும் அவர் கூறினார்.

ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்க எத்தனித்தால் அ. தி. மு கவின் 72 எம். எல். ஏக்களைக் கொண்டு மாற்று அரசை அமைக்கப்போவதாகவும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

அ. தி. மு. கவை இரண்டாகப் பிளவுபடுத்துவது தமது தார்மீகக் கடமையாகும் என்றும் அவர் கூறினார்.

### தமிழக அரசு தாக்கல் செய்த

## அவதூறு வழக்குகளின் எண்ணிக்கை நூறு!

சென்னை, டிச. 6

பத்திரிகைகள் மற்றும் அரசியல் பிரமுகர்களுக்கு எதிராக தமிழக அ. தி. மு. க. அரசு தாக்கல் செய்துள்ள அவதூறு வழக்குகளின் எண்ணிக்கை நூறைத்தாண்டிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னாள் எம். எல் ஏயான கே. பி. இராமலிங்கம் மீது கடந்த செவ்வாய்க்கிழமையன்று இரண்டு அவதூறு வழக்குகள் மாநில அரசினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்து நூறு வழக்குகள் தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 49 அவதூறு வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தொடர்ந்து கடமைபுரியலாம்

### கல்வி அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். மாவட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் கடமையாற்ற கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கண்ட தகவலை யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதே வேளை, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களை இந்த மாதத்துடன் வேலையில் இருந்து நிறுத்துமாறும் கல்வி அமைச்சு பணித்துள்ளதாகவும் பணிப்பாளர் கூறினார். (ஓ-8)

## தமிழ்க் கட்சிகள் யோசனை; தெரிவுக்குழு கூடி ஆராயும்

நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு அடுத்தவாரம் 3 நாட்களுக்கு கூடும் என்று அறிவிக்கப்படுகிறது

7 தமிழ்க்கட்சிகள் சமர்ப்பித்துள்ள 4 அம்ச யோசனைகள், இலங்கைத் தமிழரசு காங்கிரஸ் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து தெரிவுக்குழு பரிசீலனை செய்யும் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இம்மாதம் 7, 10, 11 ஆம் திகதிகளில் தெரிவுக்குழு கூடி இந்த யோசனைகள் ஆராயப்படுகிறது. (த)

### கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிச. 6

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவுக் கூட்டம் நாளை திங்கள் பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரை ஆற்றுவார். கலாநிதி சபா. ஜெயராசா "உளப் பகுப்பு இலக்கியம்" என்ற தலைப்பில் நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

### பிரிவுபசார விழா

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய உப-அதிபர் திரு. கே. வி. தனேஸ்வரன், ஆசிரியை செல்வி தில்லையம்பலம் ஆகியோர் ஓய்வு பெறுவதை யொட்டி பிரிவுபசார விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (உ-8)

### இரத்தினபுரியில் தீவிர பாதுகாப்பு

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்துக்குரிய நபர்கள் குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்துக்கு வருகின்றார்கள் என்ற அறிக்கைகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

### சென்னையில் உலகத் தமிழர் மாநாடு

உலகத் தமிழர் மாமன்றம் ஒழுங்கு செய்துள்ள, உலகத் தமிழர் மாநாடு டிசம்பர் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மைதானத்தில் நடைபெறும்.

"இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கித் தமிழர்களின் நிலைமை" என்ற பொருளை மையமாகக் கொண்டு மாநாடு நடைபெறும். (த)

### கருத்தரங்கு

"யூனிற்றஸ்ற்" எனப்படும் நவீன முதலீட்டைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் புதன்கிழமை 9 ஆம் திகதி யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டு கல்வி நெறியை முடித்து வெளியேறிய மாணவர்களின் நலன் கருதியே இக்கருத்தரங்கு நடத்தப்படுவதாக இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் யாழ். பிராந்திய இலங்கை வங்கியின் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். ஏனைய வர்த்தக மாணவர்களும் கருத்தரங்குக்குச் சமுகமளிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## விஞ்ஞான பூர்வமான....

வயப்படுத்தி அணியை ஒரு நிலைப்படுத்தும் வல்லமை அவருக்கு கைவந்த கலை.

மைதானத்துக்கு வெளியே குறும்பு செய்யும் மாணவன் விளையாட்டு மைதானத்திற்குள் இறங்கினால் விளையாட்டு மனப்பான்மை மிக்க —நெறி தவறாது— வீரனாக அவனை மாற்றிவிடும் மந்திரம் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது.

வீரர்களை வெறும் விளையாட்டுக்காக — வெற்றிகளுக்காக— உருவாக்காமல் விளையாட்டு மனப்பான்மை மிக்க ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்திற்காக வழி நடத்தியவர்.

#### ஆதர்சன வழிகாட்டி

தான் பயிற்றுவிக்கும் அணியின் ஆட்டங்களை மாத்திரம் அல்லாமல் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆட்டங்களையும் தவறாது சென்று பார்ப்பார்; தனக்குள்ளேயே கணிப்பீடுகளை வளர்த்துக் கொள்வார்; எதிர்த்து விளையாட வரும் அணியின் பலவீனம் எது பலம் எது என்பதை இனம் கண்டு நுணுக்கமாக அவதானிப்பார்; அதற்கு ஏற்றதுபோல் தனது அணிக்கு வியூகங்களை வகுத்துக் கொடுத்து, வெற்றியை உறுதி செய்வார் — மொத்தத்தில் ரீ. பி. ஒரு வெற்றிகரமான பயிற்சியாளர் என்பதை நிரூபித்து, பயிற்சியாளர்களுக்கு ஓர் ஆதர்சன வழிகாட்டியாகத் திகழ்பவர்.

"கோணர் கிக்" வாய்ப்புகளை "கோல்" ஆக்கும் திறனை தனது முன்னணி வீரர்களுக்கு அவர் பயிற்றுவித்துக் கொடுப்பதே அவதானிக்க தனிச் சிறப்புமிக்கதாக இருக்கும்.

#### தேசியமட்டத்தில் சாதனை

அவர் பயிற்றுவித்த பல வீரர்கள் இன்று தேசிய மட்டத்தில் சாதனைகள் பல புரிந்து அவர் புகழ்பரப்பி நிற்கிறார்கள்.

தன்னைச் சார்ந்தோருக்கும், தான் சார்ந்த கல்லூரிக்கும் பெருமைதேடிக் கொடுப்பதையே தன் நோக்காகக் கொண்ட ரீ. பிக்கு, அவர் வழியில் நின்று கல்லூரிக்கு தொடர்ந்து பெருமை சேர்த்துக் கொடுப்பதே நாம் செய்யக் கூடிய சிறந்த அஞ்சலியாகும்.

கடந்த நவம்பர் 6 ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்த அந்த விளையாட்டுத்துறை மேதைக்கு அவரது 31 ஆவது நினைவு தினமான இன்று எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துவோமாக.

—ஓர் அன்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழுவின்........

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரணை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஓய்வுபெற்ற நீதியரசர் ஜனாப். ஐ. எம். இஸ்மாயில் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்ததும் —

அந்த ஆணைக்குழுவின் அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதும் —

அந்த அறிக்கையின் சாராம்சம் மாத்திரம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டதும் தெரிந்தவையே.

அந்த அறிக்கையில், முன்பு எப்போதோ வைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடி மீது வாகனம் சென்றதால் இந்த சம்பவம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. [இ]

# தாதிய மாணவருக்கு சம்பளம் தர மறுப்பு

## ஆஸ்பத்திரி நிர்வாகம் குளறுபடி

யாழ். போதனா வைத்திய சாலையில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் பணிபுரிந்த 119 தாதிய மாணவர்களுக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு, வைத்தியசாலை நிர்வாகம் மறுத்துள்ளது.

இது குறித்து தாதிய மாணவர்களாகப் பணிபுரிந்த 119 பேரும் சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்யவுள்ளனர் என்று அறியவருகிறது.

யாழ். போதனா வைத்திய சாலை தாதிப் பயிற்சிப் பாடசாலையில் மூன்று வருடகாலம் பயிற்சிபெற்று இறுதிப் பரீட்சை எழுதிய 119 பேரும் இவ்வருடம் ஜூலை மாதம் 22 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வைத்திய சாலைப் பணிப்பாளரினால் சேவைக்கழைக்கப்பட்டனர்.

சுகாதார ராஜாங்க அமைச்சுச் செயலாளரின் அனுமதியுடனேயே தாதிய மாணவர் சேவைக்கு அழைக்கப்படுவதாகவும், அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் சம்பளம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள ஒரு கடிதத்தில், ஆகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என்று வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்!

வைத்தியசாலைக் கணக்காளர் கொழும்பில் சுகாதார அமைச்சுப் பணிப்பாளருடன் கலந்துரையாடியபோது நியமனம் வழங்குவதற்கு முன்னர் கடமைக்கு அழைத்தது தவறு என்றும்—

ஆகையால் ஆகஸ்ட் மாதம் பணிபுரிந்ததற்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாது என்று அறிவித்தார் என்றும்— வைத்தியசாலைப் பணிப்பாளர் தமது 27-11-1992 திகதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சுகாதார ராஜாங்க அமைச்சின் செயலாளரின் உத்தரவு செல்லுபடியாகாது என்று பணிப்பாளர் மேலாளரை இட முடியுமா? — என்று பாதிக்கப்பட்ட தாதிய மாணவர்கள் கேட்கிறார்கள்.

தங்களைப் போலவே கடந்த ஆண்டில் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரினால் சேவைக்கு அழைக்கப்பட்ட 15 பேருக்கும் உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

யாழ். போதனா வைத்திய சாலையில் ஆண்டில் பணிபுரிந்தவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவருக்கும் செப்டம்பர் மாதத்தில் நியமனம் வழங்கப்பட்டு உரிய சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். [ல]

## இராமர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் ஆதரவாளர்களோடு சென்றுகொண்டிருந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங் நேற்று பொலீஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டார் என்றும்—

அயோத்தியிலிருந்து 60 மைல் தொலைவில் உள்ள ஓரிடத்தில் அவரும் அவரது கட்சித் தொண்டர்களும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. [இ-5]

## கன்ரபரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதிமேற்றிராணியார் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்துப் பேசுவார்.

கன்ரபரி மேற்றிராணியார் கண்டி சென்று மல்வத்தை, அஸ்கிரிய மகா நாயக்கர்களையும் சந்தித்துப் பேசுவார்.

கொழும்பில் நடத்தும் பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு அதிமேற்றிராணியார் பிரபுக்கள் சபையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார் என்று நம்பப்படுகிறது.

பிரபுக்கள் சபையின் மற்றோர் உறுப்பினரான டிப்பன் அதி மேற்றிராணியார் இவ்வருட முற்பகுதியில் ஈழத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பிரபுக்கள் சபையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். தமிழர்களின் கோரிக்கைகளை ஆதரித்து அவர்களுக்குச் சாதகமாகவே டிப்பன் மேற்றிராணியாரின் அறிக்கை அமைந்திருந்தது.

இதே போன்று அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அங்கிலிக்கன் மேற்றிராணியார் ஒருவர் டவ்லிங்கும் அவுஸ்திரேலியாவில் இலங்கைத் தமிழருக்காகக் குரல் கொடுத்து வருகிறார்.

[illegible] வுக்கு அவர் எழுதி உள்ள கடி[illegible] இலங்கையில் உள்ள தமிழர் நிலை குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

## சுட்டுக்கொலை

மனித உரிமைகளுக்காக போராடும் தலைவர்களில் ஒருவரான வாஞ்சு என்பவர் நேற்று இந்திய மாநிலமான காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## கைப்பையை இழந்த பெண்

நோயாளியைப் பார்ப்பதற்காக வந்தவர் தமது கைப்பையை இழந்த சம்பவம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் இடம்பெற்றது.

கைப்பைக்குள் இரண்டாயிரம் ரூபா ரொக்கப் பணம், நாலாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் ஆகியவை இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

நகைக்கடைக்கு வந்த இடத்தில் உறவினர் ஒருவரைப் பார்ப்பதற்காக தாம் போதனா வைத்திய சாலைக்குச் சென்றதாகவும், அப்போதே இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் கைப்பையை திருட்டுக் கொடுத்த நல்லூரைச் சேர்ந்த பிரஸ்தாப பெண் கூறினார்.

கைப்பையை மேசையில் வைத்துவிட்டு 'பாஸ்' பற்றிக் கதைத்துக்கொண்டிருந்த சமயம் கைப்பை காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-15]

# மரண அறிவித்தல்கள்

## சரஸ்வதி வேலாயுதம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியையும், யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளருமாகிய திருமதி சரஸ்வதி வேலாயுதம் (B. A. (London) Dip-in-English, Dip-in-Journalism) அவர்கள் நேற்று (05-12-92) காலமானார்.

இவர் கொழும்பு சமநல சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த அ. வேலாயுதம் (Administrative Officer) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீகடம்பன் (U. K), அநுராதா, அனுபம் (வேம்படி மகளிர் மாணவிகள்) ஆகியோரது அருமைத் தாயாரும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை மாரிமுத்து தம்பதிகளின் அருமை மகளும், சிவலிங்கம், பராசக்தி, கனகரத்தினம், பொற்கொடி, பொன்னுத்துரை (Oman), இராசபாக்கியம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசரத்தினம், செந்திவேலாயுதம், கருணைவேல், தங்கராணி, அன்னராணி, காலஞ்சென்ற தம்பிரத்தினம், சுப்பிரமணியம், கனகமணி, காலஞ்சென்ற கந்தசாமி சிவாம்பிகை (Oman), திருநாவுக்கரசு, சாந்தினி ஆகியோரது அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் "கைலை இல்லம்" காளிகோவிலடி, திருநெல்வேலி கிழக்கில் இன்று (06-12-92) நிகழ்வுற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் பிற்பகல் 2.00 மணி அளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திரு. அ. வேலாயுதம்
(கணவர்)

46. செல் மேரிஸ் றோட்,
கொழும்பு-15.

[23528]

## சின்னத்தம்பி தம்பிராசா

சுந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனைக்கோட்டைச் சந்தி கனகநாயகம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சின்னத்தம்பி தம்பிராசா 5-12-92 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் (வடிவு) அன்புக் கணவரும், கனகநாயகம் (மாவிட்டபுரம் பிரதேச சபை), ஜெயக்நாயகி (இந்தியா), இராசநாயகம் (பவுணன் — ஜேர்மனி), கிருஷ்ணபிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, திருஞானசம்பந்தர், ஸ்ரீதேவி, வசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (6-12-92) ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கனகநாயகம்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[23527]

## துரையப்பாச் செட்டியார் சீனிவாசகம்

[முன்னாள் அறங்காவலர், வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்,
ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்,
முன்னாள் நிர்வாகி, ஈழநாடு பத்திரிகை]

துரையப்பாச் செட்டியார் சீனிவாசகம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமச் செட்டியார் துரையப்பாச் செட்டியார், காலஞ்சென்ற கிருஷ்ணம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாயஞ் செட்டியார், சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தையல்முத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வஅம்மையின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற கதிர்காமச் செட்டியார் கிருஷ்ணபிள்ளை, கதிர்காமச்செட்டியார் சின்னத்தம்பிச் செட்டியார் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற குப்புசாமிச் செட்டியார், காலஞ்சென்ற பழனிச்சாமி, முத்துக்குமாரசாமி, சின்னையா, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற செல்லத்துரை, ரசநாதன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சதாசிவம், பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று ஞாயிற்றுக் கிழமை (06-12-92) காலை 8 00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீ. தையல்முத்து
(மனைவி)

134. கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[23522]


# பகிரங்க ஏல விற்பனை

மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலைக்கு அருகாமையில் (நடேசு வீதியில்) இலுப்பையடி றோட்டில் ஒரு பாரிய இலுப்பை மரம், ஒரு புளிய மரம், ஒரு மாமரம் ஆகியன 12-12 92 காலை 9 00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். வாங்க விரும்புவோர் நேரில் வரவும். பணம் முழுவதும் செலுத்திய பின்னரே தறிக்க அனுமதிக்கப்படுவர்.

மு. ஜெயசிங்கம்

மட்டுவில் தெற்கு

[23524]


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னம்மா

கொக்குவில் தாவடி தெற்கு "சரவணத் தோன்றல்" கந்தையா சின்னம்மா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தபால் தந்தி இலாகா உத்தியோகஸ்தர் கணபதிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், தெய்வநாயகியின் அன்புத் தாயாரும், சட்டத்தரணி-வைத்திய கலாநிதி விவேகானந்தராசாவின் மாமியும், சுந்தரவல்லி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), கார்த்திகேயன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), ஆனந்தவல்லி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நடராசா (ஐயா அப்பு), குமாரசாமி ஆகியோரின் சகோதரியும், பவளம், கண்மணி, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற விசாலாட்சி, சோதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (6-12-92) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று தாவடி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. விவேகானந்தராசா

தாவடி தெற்கு.

[23529]

## சின்னத்தம்பி கருணாநிதி

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முத்திரைச் சந்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமாகிய சின்னத்தம்பி கருணாநிதி காலமாகிவிட்டார்.

இவர் புஸ்பராணியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், மயூரன், ஜனார்த்தன் ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற சிவராஜா, மணி, மனோ, மலர், மல்லிகா, யோகம், லலா, ராணி, ராசன், சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் குருசாமி, நாகம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. சந்திரன்

41/7. செட்டியார் தோட்டம்,
செம்மணி வீதி. நல்லூர்.

[23530]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org